# மாதாவே துணை நிரே உம்மை

மாதாவே துணை நிரே உம்மை
வாழ்த்திப் போற்ற வரம் தாரும்
ஈதோ பிள்ளைகள் வந்தோம் அம்மா
ஏற்றன்பாக எமைப் பாரும்

**1**
வானோர் தம் அரசே தாயே எம்
மன்றாட்டைத் தயவாய் ஏரும்
ஈனோர் என்றெம்மை நீர் தள்ளாமல்
எக் காலத்துமே தற்காரும்

**2**
ஒன்றே கேட்டிடுவோம் தாயே நாம்
ஓர் சாவான பவந்தானும்
என்றேனும் செய்திடாமல் காத்து
எம்மைத் தூயர்களாய்ப் பேணும்